முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 836

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2022, புதன்கிழமை

1. அறம்வேலி கொண்ட அண்ணலே
   ஆற்றலாக உலகில் மாற்றம் செய்யவேண்டி
   வரம்பெற்று வந்த ஆறுமுக அரங்கனே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே ஞான அறிவுரை ஆசி தன்னை
   இயம்பிடுவேன் பிலவ சிலை திங்கள் தன்னில்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 28ம் நாள், 12.01.2022 புதன்கிழமை)
   துணிவுபட அரங்கன் தர்மமே
   தேசமதை ஞானவழி நடத்தி இனிதே
3. இனிதே உலகோர்க்கு ஞானவழி காட்டி
   எல்லா திக்கிலும் தர்மசக்தி கொண்ட ஞானவான்கள்
   ஞானவான்கள் நிறைந்த ஆளுமையாக
   ஞானிகள் ஆட்சிக்காலமாக மாற்றம்
4. மாற்றம் சடுதி அரங்கன் தயவாலே
   மண்ணுலகம் கண்டு சிறக்கக்கூடும்
   ஆற்றல்பட அரங்கன் வழி வகுத்துத்தருகின்ற
   அன்னதான உயர்சேவை தன்னை
5. மாற்றம் கருதி உலகோர் எங்கிலும் கையில்கொண்டு
   உயர்வாக தொடர்ந்து தொண்டாக செய்துவர
   வருகவே தர்மபலம் பெருகபெருக
   வையகம் வளமும் நல்ல பாதுகாப்பும் காண்கும்
6. காண்கவே தர்மவான் அரங்கன்
   கட்டளையாக உலக மக்கள் ஏற்று
   மேன்மைதரும் சன்மார்க்க வழிகளையும்
   முழுமை பாதுகாப்புத் தரக்கூடிய தர்மவழிகளையும்
   (மனித வர்க்கத்திற்கு முழுமையான பாதுகாப்பு தருவது மனமுவந்து செய்யும் அன்னதானமே)
7. வழிகளையும் உலகோர் வழிமொழிந்து தொடர்ந்து பின்பற்றி வர
   வையகமெங்கும் உயிர்கொலை நீக்கி
   (வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் மக்கள் உயிர்கொலை நீக்கி புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொள்ள வேண்டும்)
   ஜீவதயவு என்கின்ற தர்மவான் அரங்கன் சைவநெறி நிலைத்து நிற்க
   வதையாக உள்ள நடப்புக்கால பேரிடர்களும் விலகி

8. விலகி உலகம் பாதுகாப்பை பெறும்
விரைந்து ஞானவான்கள் தலைமை உருவாகும்
கலகமில்லா நல்ல பாதுகாப்பு மிக்க
கலியுகத்தையே ஞானயுகமாக மாற்றி

9. மாற்றி அருளும் காலமாக
மகான் அரங்கன் அருளாலே அற்புதம் நிகழக்கூடும்
ஆற்றல்பட வாரீர் அரங்கன் ஞானக்குடிலுக்கு
அரங்கன்பால் யான் இருந்து அற்புதம் நிகழ்த்துவதாலே

**(முருகப்பெருமானாகிய யானே உலக நன்மைக்காக ஓங்காரக்குடில் ஆசான் அரங்கமகா தேசிகரை சார்ந்து செயல்படுவேன். ஆகவே துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க செயல்பாடுகள் அனைத்தும் முருகப்பெருமான் எனது செயல்பாடுகளே ஆகும்.)**

10. வரமென அரங்கன் கரம்பட்ட மக்களுக்கெல்லாம்
வாழும் காலமே ஞானசித்தி
பிறவா பெரும் பேறுசித்திக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

1. முக்தியும் சித்தியும் முருகன் அருளால்
சித்தியும் உண்டு சிவகதி கூடுமே

2. ஆண்டாம் சுபகிருது ஆறுமுகன் ஆண்டிட
மாண்டே வீழ்வான் மது என்ற அசுரனும்

3. இடரும் இருவினை இடரா அகலவே
தொடரும் வேலவனை தோத்திரம் செய்திட

4. மனமாயை அற்ற மாதவ வேலனை
இனமாக போற்றிட இன்பம் உண்டாம்

5. பற்றற்ற வேலவன் பதமலர் பற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்

6. அன்னையாம் வேலவன் அருளினைப் போற்றிட
என்னையும் காத்து எனக்கருள் செய்தானே

7. ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்

8. ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
கூற்றுவனை வெல்ல குறிப்பும் தோன்றுமே

9. வல்லவன் வேலனை வணங்கியே போற்றிட
நல்லவர்கள் ஆள்வார் நாட்டைதானே

10. சைவத்தலைவன் சண்முகனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே

11. வேதத் தலைவன் வேலனைப் போற்றிட
பாதமே துணையென பகர்வர் நல்லோர்

ஓரைந்தும் ஆறும் ஓதிய அருளுரை
ஈரைந்தும் ஒன்றாய் இயம்பினார் ஈசனே!

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்